**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் விளம்பி வருடம் தமிழ் மாதம் மாசி 23–ஆம் நாள் ஆங்கில வருடம் 2019 மார்ச் 07 ஆம் தேதி வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றபொருள்:1**

**கோப்புஎண்.2071/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த புதிய கடை எண் 3 ஆகிய கடைகளுக்கு குத்தகை காலம் 31.03.2019 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட நடப்பு குத்தகை கடைகளுக்கு 15% உயர்வு செய்யப்பட்ட தொகையுடன் குத்தகை உரிமத்தை 01.04.2019 முதல் 31.03.2022 வரை நீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பழைய பேருந்து கடைஎண் | பெயர் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள குத்தகை தொகை (ரூ) | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை (ரூ) | குத்தகை தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1. | கடைஎண் 3 | சீனிவாசன் | 01.04.2019 முதல் 31.3.2022 வரை | 10000/– | 1500/– | 11500/– |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1192 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:2**

கோப்புஎண்.2071/2016/அ2

| வ. எண் | பழைய பேருந்து கடைஎண் | பெயர் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள குத்தகை தொகை (ரூ) | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை (ரூ) | குத்தகை தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1. | கடைஎண் 9 | உமாமகேஸ்வரி | 01.04.2019 முதல் 31.3.2022 வரை | 6700/– | 1005/– | 7705/– |
| 2. | கடைஎண் 23 | கே.கே.முருகேசன் | 01.04.2019 முதல் 31.3.2022 வரை | 10000/– | 1500/– | 11500/– |

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து கடை எண்கள் 23 மற்றும் 9–க்கு குத்தகை காலம் 31.03.2019 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட நடப்பு குத்தகை இனத்திற்கு 15% உயர்வு செய்யப்பட்ட தொகையுடன் குத்தகை உரிமத்தை 01.04.2019 முதல் 31.03.2022 வரை நீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1193 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:3**

**ந.க.எண். 2071 /2016/அ2.**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களின் குத்தகை காலம் 31.03..2019– உடன் முடிவடைவதால் மேற்கொண்டு ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு (31.03.2022) குத்தகைக்கு விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. பேருந்து நுழைவு கட்டணம்.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1194 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:4**

**ந.க.எண்.742/2018/சி1**

காங்கேயம் நகராட்சியின் 2017–2018ஆம் ஆண்டிற்குரிய ஐந்தொகை கணக்கு வரவு செலவு அறிக்கை, பொது பேரேடு தயாரித்தல் மற்றும் பிரிண்ட் எடுத்து புத்தகங்கள் தயார் செய்தல் மற்றும் இறுதி இணக்க பதிவேடு தயாரித்தல் ஆகிய பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ.50,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் இத்தொகையினை திரு.அழகர்சாமி என்பவருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1195 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:5**

**கோப்புஎண். 1277/2015/எச்1**

காங்கயம் நகராட்சியில் தமிழக முதல்வர் அவர்கள் சீரிய திட்டமான அம்மா உணவகம் மூலம் ஏழை எளிய நடுத்தர குடும்பங்கள் பயன்பெறும் வகையில் காலை–இட்லி, மதியம்–சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் மிகக் குறைந்த விலையில் உணவுகள் தயார் செய்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2019–2020–ஆம் ஆண்டிற்கு உணவுகள் தயார் செய்ய தேவையான புழுங்கல் அரிசி, பச்சரிசி, மளிகைப் பொருட்கள், காய்கறிகள், பால், கேஸ்சிலிண்டர், உணவு தயார் செய்யும் மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் உணவகத்தில் உள்ள கலன்களில் ஏற்படும் பழுதுகள் சரிசெய்தல் ஆகிய செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.45.00 இலட்சம்

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட செலவினங்கள் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1196 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:6**

**ந.க.எண்.195/2019/எச்1**

காங்கயம் நகராட்சியில் வார்டு 1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/– வழங்கும் திட்டம் விண்ணபப்பங்களை ஆட்களை கொண்டு கணினியில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிக்காக விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | அச்சக உரிமையாளர்களிடம் | தொகை ரூ. (ஒரு விண்ணபத்திற்கு) |
|---|---|---|
| 1 | LASER COMPUTER, 45, MAIN ROAD, KANGEYAM 638701 | ரூ.8.50/– |
| 2 | BHARATH COMPUTERS, 259, DHARAPURAM ROAD, KANGEYAM - 638701 | ரூ.8.00 /– |
| 3 | SHARA COMPUTERS 305, PALAYAKOTTAI ROAD, KANGEYAM -638701 | ரூ.9.00 /– |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர். BHARATH COMPUTERS, 259, DHARAPURAM ROAD, KANGEYAM - 638701 அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1197 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:7**

ந.க.எண்.195/2019/எச்1

காங்கயம் நகராட்சியில் வார்டு 1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/– வழங்கும் திட்டம் விண்ணபப படிவம் 9500 எண்ணிக்கையில் அச்சிட்டு சப்பளை செய்தல் பணிக்காக உள்ளூர் அச்சக உரிமையாளர்களிடம் விலைப்புள்ளி கோரியதில் ஐந்து பக்கங்கள் கொண்ட ஒரு செட் விண்ணபத்திற்கு கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | அச்சக உரிமையாளர்களிடம் | தொகை ரூ. (ஐந்து பக்கங்கள் கொண்ட ஒரு செட் விண்ணபத்திற்கு) |
|---|---|---|
| 1 | VALAMPUREE OFFSET, LGGS காலனி, மெயின்ரோடு, காங்கயம் –638701. | ரூ.10.00 /– |
| 2 | DHANABAL POWER PRESS, 100, ராஜாஜி வீதி, காங்கயம் – 638701. | ரூ.10.50 /– |
| 3 | VIVEKANANDHA OFFSET, 21, வினோபா வீதி, காங்கயம் – 638 701. | ரூ.11.00 /– |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர். VALAMPUREE OFFSET, LGGS காலனி, மெயின்ரோடு, காங்கயம் –638701 அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1198 . நாள்.07.03.2019.**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:8**

**கோப்புஎண்.2070/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் டி.வி விளம்பரம் குத்தகை காலம் 30.04.2019 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட நடப்பு ஆண்டு குத்தகை இனத்திற்கு 5% உயர்வு செய்யப்பட்ட தொகையுடன் குத்தகை உரிமத்தை 01.05.2019 முதல் 30.04.2020 வரை நீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ .எ ண் | ஆண்டு குத்தகை இனம் | பெயர் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள ஆண்டு குத்தகை | 5% உயர்வு செய்யப்பட்ட தொகை | ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | டி.வி விளம்பரம் | சையது பஷீர் அகமது | 01.05.2019 முதல் 30.04.2020 வரை | 31500/– | 1575/– | 33075/– |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1199 . நாள்.07.03.2019.**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:9**

**கோப்புஎண்.755/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான திருப்பூர்ரோடு ஐ.டி.எஸ்.எம்.டிகடை எண்.6 க்கு ஒப்படைக்கும் தேதி முதல் 31.03.2022 முடிய காலத்திற்கு 07.03.2019 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். கடைஎண். 6 க்கு கீழ்கண்ட நபர்கள் ஏலம் கோரியுள்ளார்கள் இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் | கடை எண் | உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.M.கோபாலகிருஷ்ணன் | திருப்பூர்ரோடு ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண் 6 | 7800/– |
| 2 | திருமதி.S.சாந்தி | திருப்பூர்ரோடு ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண் 6 | 8200/– |

**அலுவலகக் குறிப்பு:**

வரிசை எண்.2–ல் உள்ள திருமதி.s.சாந்தி அவர்களின் உயர்ந்தபட்ச ஏலத் தொகையை ஏற்று கடையை வாடகைக்கு விட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1200 . நாள்.07.03.2019.**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

மன்றபொருள்:10

கோப்பு எண் :727/2018/எப்1

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகரமைப்பு பிரிவு பணியை சார்ந்த கட்டிட உரிமக் கட்டணங்கள், மனை ஒப்புதல் மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றை நகராட்சி நிதிநிலைமையை கருத்தில் கொண்டும், அதிகரித்து வரும் செலவினங்களை கருத்தில் கொண்டும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 05.03.2019—ந் தேதிய ந.க.எண். 31159 / 2018 / டிபி3—ன் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019—ன்படி விதி 14—ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் எனவும் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் மூன்றாண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையிலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920—ன்படியும் கீழ்கண்டவாறு கட்டண விகிதங்கள் மாற்றி அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>திருத்தப்பட்ட கட்டண அட்டவணை</u>

| வ. எண் | 1920;ம் வருடத்திய த.மா.ந. சட்டம் பிரிவின் கீழ் | உரிமையாணை தொகை விதிக்கப்பட வேண்டிய விபரம் | புதிதாக மற்றும் திருத்தப்பட்ட கட்டண விகிதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | அளவு | காலம் | விகிதம் ரூபாய் |
| 1. | 175,176 மற்றும் 177 | அ) காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற | 1 ஏக்கர் வரை | 1 ஏக்கருக்கு மற்றும் 1 ஏக்கருக்கு மேல் ஒவ்வொரு ஏக்கருக்கும் (ஒரு தடவை மட்டும்) | 10000 |
| | | ஆ) மனை உட்பிரிவு கட்டணம் | 1 சதுர மீட்டருக்கு | ஒரு தடவை மட்டும் | 5 |
| 2. | 187 மற்றும் 188 | தெரு ஓரங்களில் கட்டிட சாமான்கள் சேகரித்து வைத்தல் | | ஒரு தடவை மட்டும் | கட்டிட உரிமக் கட்டணத்தில் 50 சதவீதம் செலுத்த வேண்டும் |
| | மனை அங்கீகரிக்க குடியிருப்பு | | | | |
| 3. | 197 | அ) 1. குடிசை நீங்கலாக வீடு கட்ட மனை அங்கீகரிக்க | 100 சதுர மீட்டர் வரை | 1 தடவை மட்டும் | 400 |
| | | 2. மேற்படி 100 சதுர மீட்டர் முதல் | 500 ச.மீ மீட்டர் வரை | 1 தடவை மட்டும் | 1000 |
| | | 3. மேற்படி 500 சதுர மீட்டருக்கு மேல் | 500 ச.மீ மீட்டருக்கு மேல் | 1 தடவை மட்டும் | 2000 |
| | | ஆ) 1) குடியிருப்பில்லாத கட்டிடங்கள் கட்ட மனை அங்கீகாரம் | 100 சதுர மீட்டர் வரை | 1 தடவை மட்டும் | 1000 |
| | | 2) மேற்படி 100 சதுர மீட்டர்முதல் 500 சதுர மீட்டர் வரை | | 1 தடவை மட்டும் | 2000 |
| | | 3) 500 சதுர மீட்டருக்கு மேல் | | 1 தடவை மட்டும் | 4000 |
| | குறிப்பு | அனுமதி புதுப்பிக்க (அ) மற்றும் (ஆ) கண்டுள்ள கட்டணமும் இல்லை. | | | |
| 4 | 208 | 1, குடிசை புதிதாகவோ, | 1 சதுர மீட்டர் | 1 தடவை மட்டும் | 200 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கூடுதலாகவோ, கூரையை மாற்றி அமைக்கவோ கட்டும் கட்டுமானங்களுக்கு | அதன் பாகத்திற்கு | | |
| 5 | 197 மற்றும் 215 | குடிசை நீங்கலாக புது கட்டிடம் மாறுதல் செய்து கட்டுதல் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி | | | |
| | | அ) குடியிருப்பு உபயோகத்திற்காக ஆர்.சி.சி கட்டிடம் கட்டுவதற்காக | | | |
| | | 1. தரை தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 350 |
| | | 2. தரைகீழ் தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 350 |
| | | 3. முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டத்திற்கு அதற்கு மேல் கட்டப்படும் தளத்திற்கும் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 400 |
| | | ஆ) குடியிருப்பில்லாத உபயோகத்திற்காக ஆர்.சி.சி கட்டிடம் கட்டுவதற்காக | | | |
| | | 1. தரை தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 700 |
| | | 2. தரைகீழ் தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 700 |
| | | 3. முதல் தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 800 |
| | | 4. இரண்டாவது தளம் மற்றும் அதன் மேல் கட்டப்படும் ஒவ்வொன்றிற்க்கும் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 900 |
| | | இ) ஓடு, சிமெண்ட் ஓடு தகரம் கூரை கட்டிடம் 1 முதல் மற்றும் அதற்கு மேல் தளங்களுக்கும் | | | |
| | | 1. குடியிருப்பு கட்டிடங்களுக்கு | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 250 |
| | | 2. குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 500 |
| | | ஈ) சுற்றுச்சுவர் | | | |
| | | 1. 1.50 மீட்டர் உயரத்திற்கு மேற்படாத சுற்றுசுவர் | 10 மீ நீளத்திற்கு | 5 வருடம் | 200 |
| | | பிரதான கட்டிடத்தில் இல்லாமல் தனியாக | | | |
| | | உ) குளியல் அறை, மல அறை கட்டுவதற்கு | | | |
| | | 1. குளியல் அறை கட்ட | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 350 |
| | | 2. கழிப்பறை | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 350 |
| | | 3. குளியல்/ கழிப்பறை கட்ட | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 500 |
| | | 4. செப்டிக் டேங்க் | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 500 |
| | | 5. ஆழ்துளை கிணறு | | ஒரு தடவை | 1000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அமைக்க | | மட்டும் | |
| | | ஊ) அனுமதியற்ற கட்டுமானத்திற்கு | கட்டிட உரிம கட்டணத்தில் இருந்து 50% கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்படும். | | |
| | | **குறிப்பு**<br>திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் சமர்ப்பிக்கும்பட்சத்தில் அனுமதி அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடம் கட்டப்பட்டு வந்தாலோ அல்லது கட்டிடப்பணி ஆரம்பிக்கப்படாமல் இருந்தாலோ மேற்கண்ட கட்டிட அனுமதிக்கான கட்டணத்தில் 75 சதவீதம் செலுத்தினால் ஒருமுறை மட்டும் மூன்றாண்டு காலத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி புதுப்பித்துக் கொள்ள அனுமதிக்கப்படும். | | | |
| 6 | 217 | தனிப்பட்டோர் நிலங்களில் கண்காட்சி, சர்க்கஸ் இதுபோன்ற காரியங்களுக்கு தற்காலிக கீற்றுக் கொட்டகை போட | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 1 நாள் | 100 |
| | 1. | நகர வரைபடம் வழங்க (வரைபடம் முழுவதும்) | ஒன்றுக்கு | | 500 |
| | 2. | அனுமதிக்கப்பட்ட வரைபடம் உண்மை நகல் வழங்க | ஒன்றுக்கு | | 200 |
| | 3. | அத்துமால் காட்ட | ஒரு பக்கத்திற்கு | | 100 |
| | 4. | புல வரைபடம் நகல் வழங்க | புல எண் ஒன்றுக்கு | | 200 |
| | 5. | இடிக்கப்பட்ட கட்டிடங்களில் கட்டுமான கழிவு பொருட்களை அகற்ற | லாரி லோடு ஒன்றுக்கு | | 1000 |
| | 6. | கட்டிட வடிவமைப்பாளர்கள் (Architects), பொறியாளர்கள் (Engineers), கட்டமைப்புப் பொறியாளர்கள் (Structural Engineers), கட்டிட அபிவிருத்தியாளர்கள் (Construction Engineers), தரத்தணிக்கையாளர் (Quality Auditors), நகரமைப்பு வல்லுநர் (Town planners) மற்றும் அபிவிருத்தியாளர் (Developers) பதிவு செய்தல் | பதிவுக் கட்டணம் | 1 தடவை மட்டும் | 5000 |
| | 7. | கட்டிட வடிவமைப்பாளர்கள் (Architects), பொறியாளர்கள் (Engineers), கட்டமைப்புப் பொறியாளர்கள் (Structural Engineers), கட்டிட அபிவிருத்தியாளர்கள் (Construction Engineers), தரத்தணிக்கையாளர் (Quality Auditors), நகரமைப்பு வல்லுநர் (Town planners) மற்றும் அபிவிருத்தியாளர் (Developers) அனுமதியினை புதுப்பித்தல் | புதுப்பித்தல் கட்டணம் | 5 வருடத்திற்கு | 5000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **<u>கூர்ந்தாய்வுக் கட்டணம்</u>**<br>அ. கட்டிட விண்ணப்பத்திற்கு | கூர்ந்தாய்வுக் கட்டணம் / பதிவுக் கட்டணம் | ஒரு தடவை மட்டும் | 500 |
| | | ஆ. மனை ஒப்புதல், மனை உட்பிரிவு, மனை ஒருங்கிணைப்பு | அனுமதி கட்டணம் | ஒரு தடவை மட்டும் | 2000 |
| | | இ. கட்டிட முடிவு குறித்த சான்றிதழ் வழங்க | | ஒரு தடவை மட்டும் | 500 |
| | | **<u>தொலைதொடர்பு கோபுரம் அமைக்க</u>** | | | |
| | | 1. 15 மீட்டர் வரை | | ஒரு தடவை மட்டும் | 10000 |
| | | 2. 15 மீட்டர் முதல் 20 மீட்டர் வரை | | ஒரு தடவை மட்டும் | 20000 |
| | | 3. 20 மீட்டர் முதல் 30 மீட்டர் வரை | | ஒரு தடவை மட்டும் | 30000 |
| | ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதி எண். 12 | கட்டிடத்தை இடிப்பதற்கான அனுமதி கட்டணம் (Demolistion charges) | i) ஒரு சதுர மீட்டர் முதல் 20 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 1000 |
| | | | ii) 21 சதுர மீட்டர் முதல் 40 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 2000 |
| | | | iii) 41 சதுர மீட்டர் முதல் 60 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 3000 |
| | | | iv) 61 சதுர மீட்டர் முதல் 80 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 4000 |
| | | | v) 81 சதுர மீட்டர் முதல் 100 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 5000 |
| | | | vi) 100 சதுர மீட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் கூடுதலாக சதுர மீட்டருக்கு ரூ. 50 /– வீதம் வசூல் செய்யப்படும். | | |
| 9 | நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 59 (2) ன்படி | அரசு வழிகாட்டுதல்படி நிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கட்டணம் | 1 சதுர மீட்டர் | ஒரு தடவை மட்டும் | 6 |
| 10 | | அரசு வழிகாட்டுதல்படி கட்டிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கட்டணம் | 1 சதுர மீட்டர் | ஒரு தடவை மட்டும் | 30 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) திருத்தப்பட்ட கட்டணங்களை 01.04.2019 முதல் அமல்படுத்தலாம்.
3) தினசரி நாளிதழ் மற்றும் அரசிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,50,000 /–த்தை பொதுநிதியிலிருந்து செலவழித்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1201. நாள்.07.03.2019.**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:11**

**கோப்பு எண் : 1933/2019/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான திருப்பூர் ரோடு ஐ.டி.எஸ்.எம்.டிகடையின் குத்தகை உரிமம் **31.03.2019** உடன் முடிவடைகிறது. ஆகவே, கடைஎண்கள் **7,11,12** ஆகிய கடைகளின் உரிமைதாரர்கள் தங்களுக்கு கடை வேண்டாம் என தெரிவித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் கடை எண்கள் **7,11,12** ஆகிய கடைகளுக்கு பொது ஏலம் விடவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1202 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:12**

**கோப்புஎண். 284 /2018/எப்1**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – **2019** னை, அரசாணை நிலை எண். **18**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA1), நாள். **04.02.2019** –ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.**43**, நாள். **04.02.2019**–ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–**2019** னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1203 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:13**

**ந.க.எண். 465/2019/எச்1**

தமிழ்நாடு மாநிலமானது பயன்படுத்தப்பட்டு வீசப்படும் நெகிழியை தடைசெய்யும் பொருட்டு **1986** ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்படி (மையச்சட்டம் **29/1986**) **2019** ஜனவரி **1** இல் இருந்து நடைமுறையில் பயன்படுத்தப்படும் நெகிழி பொருட்களை உற்பத்தி செய்வதை, விற்பனை செய்வதை, போக்குவரத்து செய்வதை, சேமித்து வைத்தலை, பகிர்ந்தளித்தலை மற்றும் பயன்பாட்டினை தடை செய்து அறிவிப்பினை வெளியிட்டார்கள். இந்த நோக்கத்திற்காக அரசானது இந்திய அரசின் **1986** ஆம் ஆண்டு, பிப்ரவரி **10**–ஆம் தேதியிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் எண்.S.O 152 (E) இன் உடன் இணைந்த மைச்சட்டம் **29/1986** இன் பிரிவு **5** இன்படி அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

காங்கயம் நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் எழுத்து மூலமாகவும், செயல் ரீதியாகவும் பயன்படுத்தப்படும் மற்றும் தூக்கிவீசப்படும் நெகிழி பொருள்களை தடை செய்வதை நிறைவேற்றும் பொருட்டு மேலே கூறப்பட்ட நெகிழிப் பொருட்களை தடை செய்வது தொடர்பாக வகைமுறைகளை மீறும் போது பணத்தண்டம் விதிப்பதற்கு ஏதுவாக அரசானது சென்னை மாநகராட்சி சட்டம் **1919** (தமிழ்நாடு சட்டம் IV/**1919**)க்கு தமிழ்நாடு மாவட்டநகராட்சிகள்சட்டம்,**1920**(தமிழ்நாடு சட்டம்V/**1920**)க்குதக்கவாறு

கீழ்கண்ட விவரப்படி திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது. அதன்படி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 12/2019 சட்டத்தினை நடைமுறைப்படுத்திட ஏதுவாக இந்நகராட்சியில் மன்ற தீர்மானம் நிறைவேற்றிடவும், இது குறித்து ஏற்கனவே வெளியிடப்பட்ட துணைவிதிகள் கூடுதலாக புகுத்தல் மற்றும் திருத்தம் செய்திட (Amendment) தக்க நடவடிக்கை எடுத்திட தெரிவித்து வரப்பெற்ற நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.44555/2013/பி3, நாள்.28.02.2019 மன்றத்தீர்மானம் பார்வைக்கும் அனுமதிக்கும்

**1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 306 மற்றும் 308க்கு திருத்தம்**

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு சட்டம் V/1920 | 1. | 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பின்பு (இதில் இதன்பின்பு இந்தப்பகுதியில் 1920 ஆம் ஆண்டு சட்டம் என சுட்டப்பட்டுள்ளவாறு) 306 ஆம் பிரிவில் (28) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும். | 306 ஆம் பிரிவிற்கான புகுத்துதல் |
| (28–A) | | " (28–A) பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Plastics) சேகரித்தலை, வழங்குதலை, கொண்டு செல்லுதலை, விற்னை செய்தலை மற்றும் பகிர்ந்தளித்தலை தடை செய்வதற்காக," | |
| | 7 | 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 308ஆம் பிரிவில்,–– | 308 ஆம் பிரிவிற்கான திருத்தம் |
| | | (a) கூறில் "ஐம்பது ரூபாய்" மற்றும் "பதினைந்து ரூபாய்" எனும் சொற்றொடருக்காக "ஓராயிரம் ரூபாய்" மற்றும் "இருநூற்று ஐம்பது ரூபாய்" எனும் சொற்றொடர் முறையே மாற்றாக அமைத்தல் வேண்டும். | |
| | | (b) கூறில் "பத்து ரூபாய்" எனும் சொற்றொடருக்காக "இருநூறு ரூபாய்" எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். | |
| 308–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல் | 8 | 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 308 ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவைப்புகுத்துதல் வேண்டும் அதாவது:- "308–A. பயன்படுத்திய தூக்கி எறிகின்ற நெகிழியை தடை செய்யும் துணை விதிகளை மீறியதற்கான தண்டம்.– 306 ஆம் பிரிவின் (28–A) கூறின்படி, துணைவிதியை இயற்றுகையில் 308 ஆம் பிரிவில் எது எவ்வாறு காணப்படினும், மன்றமானது துணை விதிகளை மீறுகின்ற நபர் எவரும் VII–A ஆம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மன்றத்தால் நிர்ணயம் செய்யலாகும் தொகைக்கு மிகாத பணத்தண்டம் என்ற முறையில் செலுத்துவதற்கு கட்டுப்பாடு உடையவராதல் வேண்டும் என்பதற்கு வகை செய்யலாம். நபர் நான்காவது முறையாக மீறுவாரானால், இந்தச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள வணிக உரிமத்தை இரத்து செய்தல் வேண்டும்.". | |

| | | | |
|---|---|---|---|
| VII A எனும் புதிய இணைப்பு பட்டியலை புகுத்துதல். | | 1920 ஆம் ஆண்டு VII ஆம் இணைப்பு பட்டியலுக்குப் பின்பு பின்வரும் இணைப்பு பட்டியலை புகுத்துதல் வேண்டும். அதாவது:- | |

"இணைப்பு பட்டியல் VIII-A

பிரிவு 306 (28–A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்.

| வரிசை எண் | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | இருபத்தைந் தாயிரம் ரூபாய். | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய். |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந் தாயிரம் ரூபாய். |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஒரு நூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய்." |

இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக்காலம் 90 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால்அபராத அட்டவணை (அட்டவணை–1) படி இந்தத் துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு அபராதம் விதிக்கப்படும்.

துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் மேற்குறிப்பிட்டுள்ளபடி தண்டத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன்/அவள்–க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல்நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

**மேல் முறையீட்டிற்கு உரிமை**

காங்கயம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை திட்டம் 2016 துணைவிதிகள் திருத்தம் தொடர்பானஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் நாளிதழில் வெளியிட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் பொது மக்கள் யாவரும் காங்கயம் நகராட்சி ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத்துணை விதிகள் காங்கயம் நகராட்சி மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்ற பின் நடைமுறைப்படுத்தப்படும்.

**அலுவலகக்குறிப்பு:**

நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–இன்கீழ் உட்பிரிவு 28-A என புகுத்தம் செய்திருப்பதையும் மற்றும் பிரிவு 308–ன் கீழ் உட்பிரிவு 308A என உட்புகுத்தம் செய்து திருத்தம் செய்து வெளியிடப்பட்ட சட்ட திருத்தம் செயலாக்கம் செய்திட காங்கயம் நகராட்சியில் பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–ன் கீழ் உரிய துணை விதிகள் ஏற்படுத்திட அல்லது துணை விதிகள் திருத்தம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1204 . நாள்.07.03.2019.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
காங்கயம் நகராட்சி